ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2319/36 - 2023 පෙබරවාරි මස 14 වැනි අඟහරුවාදා - 2023.02.14

*2319/36 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 14 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

**2017 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை பொறியியற் பேரவை**

*2017 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை பொறியியற் பேரவையின் 38 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 16(6) என்னும் பிரிவின் கீழ் நீர்ப்பாசன அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**றொஷான் ரணசிங்ஹ,**
நீர்ப்பாசன அமைச்சர்.

கொழும்பு,
*2023, சனவரி மாதம் 15.*

ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள் உயர் தொழில்சார் துர்நடத்தை ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. இவ்வொழுங்குவிதியில் எடுத்துக்கூறப்பட்ட மற்றும் வெளிப்படுத்தப்பட்ட செயல்கள் மற்றும் செய்யாமைகள் பொறியியற் பேரவையினால் அல்லது அவர்களுடைய ஒழுக்காற்றுக் குழாமினால் அல்லது அவ்வாறு செய்வதற்கு தத்துவமளிக்கின்றதான ஒழுக்காற்றுச் சபையினால் நடாத்தப்படும் ஒழுக்காற்று விசாரணைக்கமைந்தனவாகும்.

1A - G 38846 — 11 (2023/02)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

3. பொறியியல் தொழிலரின் உயர்தொழில்சார் துர்நடத்தையின் பொருள்கோடல் என்பது-

(i) சட்டமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட இலங்கையிலுள்ள சட்டங்களின் மீறுகை ஒன்றுக்கு இட்டுச்செல்கின்றதான பொறியியல் தொழிலர் ஒருவராக உயர்தொழில்சார் தொழிலை புரியும்போதான ஏதேனும் செயல் அல்லது செய்யாமை ;

(ii) இலங்கை அரசாங்கத்தின் எழுத்திலான கொள்கைகள் மற்றும் ஒழுங்குவிதிகளின் மீறுகைக்கு இட்டுச்செல்கின்றதான பொறியியல் தொழிலலொருவராக உயர்தொழில்சார் தொழிலை புரியும்போதான ஏதேனும் செயல் அல்லது செய்யாமை ;

(iii) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு கையொப்பமிடப்படுமிடத்தும் பங்குபற்றுமிடத்தும் எழுத்திலான உடன்படிக்கைகள் அல்லது பிரகடனங்களின் மீறுகைக்கு இட்டுச்செல்கின்றதான பொறியியற் தொழிலர் ஒருவராக உயர்தொழில்சார் தொழிலை புரிகையிலான ஏதேனும் செயல் அல்லது செய்யாமை ;

(iv) காலத்துக்குக் காலம் இலங்கை பொறியியற் பேரவையினால் நிறைவேற்றப்பட்ட மற்றும் அறிமுகப்படுத்தப்பட்ட விதிகள் மற்றும் ஒழுக்கக் கோவைகளின் மீறுகைக்கு இட்டுச்செல்கின்ற பொறியியற் தொழிலர் ஒருவருக்கு உயர்தொழில்சார் தொழிலை புரிகையிலான ஏதேனும் செயல் அல்லது செய்யாமை ;

(v) பொறியியல் தொழிலர் ஒருவராக உயர்தொழில்சார் தொழிலைப் புரிகையில் பொறியியற் தொழிலர் ஒருவராக துர்ப்பழக்கத்துக்கு மற்றும் நேர்மையின்மைக்கு இட்டுச்செல்கின்ற ஏதேனும் செயல் அல்லது செய்யாமை ;

(vi) பொறியியல் தொழிலர் ஒருவராக உயர்தொழில்சார் தொழிலை புரிகையிலான குற்றவியல் தவறுக்கு அல்லது குடியியல் சேதத்திற்கு இட்டுச்செல்வின்ற ஏதேனும் செயல் அல்லது செய்யாமை ;

(vii) உயர்தொழில்சார் கவனயீனம் காரணமாக போதியதும் போதுமானதுமான கவனத்தைச் செலுத்துவதற்குத் தவறுகின்றதான பொறியியல் தொழிலர் ஒருவராக உயர் தொழில்சார் தொழிலை புரிகையிலான ஏதேனும் செயல் அல்லது செய்யாமை ;

(viii) பொறியியல் உயர்தொழிலின் நேர்மை மற்றும் மதிப்பை சேதப்படுத்துகின்றதான மகிழ்ச்சியற்ற பண்புகள்,

இவ்வொழுங்குவிதியின் இல. 4, 5, 6 இனை மீறுகின்றவரான பொறியியல் தொழிலர் உயர்தொழில்சார் துர்நடத்தைக்கு இட்டுச் செல்கின்றது.

4. பொறியியற் தொழிலர் தங்களுக்கு குறித்தளிக்கப்பட்ட மற்றும் விசேடமாக தகைமை பெற்றதான பணிகள் மற்றும் கடமைகளை மட்டும் பொறுப்பெடுத்தல் வேண்டும்.

5. பொறியியற் தொழிலர் பின்பற்றவேண்டியதான எல்லா வகையினவுமான வழிகாட்டுநெறிகள், கட்டணங்கள், வடிவமைப்புகள் மற்றும் நிறைவேற்றுப் படிமுறைகள் என்பன எழுத்தில் இருத்தல் வேண்டும்.

6. பொறியியற் தொழிலரினால் நிறைவேற்றப்படுகின்றதான எல்லா வகையினவுமான வழிகாட்டுநெறிகள், கட்டளைகள், வடிவமைப்புகள் மற்றும் நிறைவேற்றுப் படிமுறைகள் என்பன எழுத்தில் இருத்தல் வேண்டும்.

7. பொறியியற் தொழிலர் ஒருவர் நியாயமான மனிதர் ஒருவரிடமிருந்து தேவைப்படும் கவனத்தைக் கொடுப்பதற்குத் தவறினால் அது அவரது தொழிலுள்ள உயர்தொழில்கள் துர்நடத்தை ஒன்றாக அமையும்.

8. நிபுணத்துவ அறிவு உடனான பொறியியற் பேரவையானது பிணக்கு எழுகின்றவிடத்து குறித்த பொறியியல் துறையினுள் உயர்தொழில்சார் துர்நடத்தை நிகழ்ந்துள்ளதா என்பதை சம்பவத்திற்கு சம்பவம் அல்லது செயலுக்கு செயல் அல்லது செய்யாமைக்கு செய்யாமை பரிசோதிப்பதற்கு தத்துவமளிக்கப்படுகின்றது.

9. (இலங்கை சான்றுக்கட்டளைச் சட்டத்தின் 45 ஆம் பிரிவின்கீழ்) குறிப்பிட்ட வழக்கெழுவினாவிற்கு அது ஏற்புடையற்பாலதாக இருக்கும்வரை நிபுணத்துச்சான்று தொடர்பாக சான்றுச் சட்டத்திலிருந்து உதவி பெறுவது சுதந்திரமானதாகும்.

10. இவ் ஒழுங்குவிதியை மீறுகின்றவரான பொறியியற் தொழிலர் காலத்திற்குக் காலம் இலங்கை பொறியியற் பேரவையினால் நிறைவேற்றப்பட்ட ஒழுக்காற்று நடவடிக்கைமுறையினால் ஆளப்படவுள்ளார்.

11. இவ்வொழுங்குவிதிகளில் -

"சட்டம்" என்பது, 2017 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை பொறியியற் பேரவைச் சட்டம் எனப் பொருள்படும்.

"பொறியியற் பேரவை" அல்லது "பேரவை" அல்லது "இலங்கை பொறியியற் பேரவை" அல்லது "இலங்கை பொறியியற் பேரவை" என்பது, 2017 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கைப் பொறியியற் பேரவை எனக் குறிப்பிடப்படுகின்றது.

EOG 02-0143

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.